بِسْمِ اللّٰہِ الرَّحْمٰنِ الرَّحِیْمِ

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக) அவர்கள் 22.12.2017 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

**தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:**

கடந்த குத்பாவில் நான் சஹாபா ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அவர்களுடைய கண்ணியம், மேன்மை மற்றும் அவர்களின் முன்னுதாரனங்களின் அடிப்படையில் சில விஷயங்களை கூறி இருந்தேன். சில சஹாபாக்களின் வாழ்க்கை சம்பவங்களையும் கூறியிருந்தேன். இன்னும் சிலவற்றை கூற விரும்பியிருந்தேன். ஆனால் நேரக் குறைவின் காரணமாக எடுத்துரைக்க முடியாமல் போனது. பின்னர் மக்களிடமிருந்து வந்த கடிதங்களின் மூலமாக நான் எடுத்து வைத்திருந்த குறிப்புகளை குறைந்தபட்சம் கூறி விட வேண்டும் என நான் உணர்ந்தேன். அதன் மூலம் சஹாபாக்களைப் பற்றியும் அவர்களின் தியாகங்களைப் பற்றியும் அறிந்து கொள்வதுடன் அவர்களின் முன்னுதாரணங்களை செயல்படுத்துவதின் பக்கம் நமக்கு கவனமும் ஏற்படும் என்று நான் நம்புகின்றேன்.

எனவே இன்று நான் அந்த அடிப்படையிலேயே விஷயங்களைக் கூறுவேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க ஒரு சஹாபி ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் ஆவார்கள். ஒரு சஹாபி என்ற அடிப்படையில் நிச்சயமாக அவர்களுக்கு ஒரு அந்தஸ்து இருந்தது. பல்வேறு சிறப்புகளை அன்னார் பெற்றிருந்தார்கள். ஆனால் அன்னாரின் அமீன் என்ற பண்பின் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாருக்கு வழங்கிய நற்சான்றுதழைப் பற்றி அறிவிப்பில் வருகின்றது.

நஜ்ரான் பகுதியை சார்ந்தவரிடம் வரி வசூல் செய்வதற்காக ஒருவரை அனுப்பும்படி கூறிய போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். நான் நிச்சயமாக உங்களிடம் ஒரு முழுமையான நம்பிக்கைக்குரியவரை அனுப்புவேன். அப்போது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது சஹாபாக்கள் தலையை உயர்த்தி இங்கும் அங்கும் பார்க்கத் துவங்கினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிய அந்த சிறப்பிற்குரிய மனிதர் யார் என அவர்கள் காண விரும்பினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அபூ உபைதா அவர்களே ! எழுந்திருங்கள். பின்னர் ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களை அங்கு அனுப்பி வைக்க கட்டளையிட்டார்கள். அவர்களைப் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒரு வழிகாட்டுதலைப் பற்றி ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்களிடமிருந்து இவ்வாறு அறிவிப்பு கிடைக்கின்றது:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ஒவ்வொரு உம்மத்திலும் நிச்சயமாக ஒரு அமீன் அதாவது நம்பிக்கைக்குரியவர் இருப்பார். எனது சமுதாயமே ! நமது அமீன் அதாவது நம்பிக்கைக்குரியவர் ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜராஹ் அவர்கள் ஆவார்கள்.

இது எத்தனை பெரிய சிறப்பை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாருக்கு வழங்கியுள்ளார்கள்!

அன்னாரின் பணிவு மற்றும் ஒத்துழைப்பு மற்றும் நுட்பமான ஞானத்துடன் பிரச்சனைகளை தீர்ப்பது தொடர்பான ஒரு சம்பவம் இவ்வாறு வருகின்றது:

ஒரு போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அமர் பின் ஆஸ் அவர்களை படைத் தலைவராக ஆக்கி அனுப்பினார்கள். அங்கு சென்ற பிறகு எதிரிகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பது தெரிய வந்தது. அன்னாரின் படையில் பெரும்பாலும் புதியவர்களே இருந்தார்கள். பெரிய சஹாபாக்கள் குறைவானவர்களே இருந்தார்கள். அதனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஹஸ்ரத்

அமர் பின் ஆஸ் அவர்கள் மேலும் உதவி வேண்டினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களின் தலைமையில் ஒரு படைப் பிரிவை அனுப்பி வைத்தார்கள். அப்போது ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த அறிவுரையை செய்தார்கள்.

இரண்டு அமீர்மார்களும் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்புடன் பணி செய்ய வேண்டும். ஆனால் அமர் பின் ஆஸ் அவர்கள் படையோ எனது உதவிக்காகவே வந்துள்ளது என்று நினைத்து புதிதாக வந்து சேர்ந்த படையை தமக்கு கீழ் செயலாற்றக் கூடியதாக எண்ணினார்கள். மேலும் ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களின் சிப்பாய்களுக்கு நேரடியாக கட்டளையிடத் தொடங்கினார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களின் தலைமையின் கீழ் பெரிய சஹாபாக்கள் இருந்தார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அமீராக ஆக்கி சுதந்திரமான முறையில் படையின் தலைவராக நியமித்துள்ளார்கள். மேலும் ஒருவர் மற்றவருடன் ஒத்துழைப்பு நல்கியவாறு செயல்பட வேண்டும் என கூறியிருந்தார்கள். ஹஸ்ரத் அமர் பின் ஆஸ் தமது படையின் தலைவர் ஆவார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் தமது படையின் தலைவராக இருந்தார்கள்.

ஆயினும், இருவரும் தங்களுக்கிடையில் ஒத்துழைப்புடன் பணி செய்யும்படி அறிவுரை வழங்கி இருந்தார்கள். ஆனால் அம்ர் பின் ஆஸ் அவர்களோ, நானோ படையின் அமீர் ஆவேன். எனது வேண்டுகோளிற்கேற்பவே புதிதாக படை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என கூறினார்கள். அந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் எந்த தர்க்கத்திலும் ஈடுபடாமல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னை ஒரு சுதந்திரமான அமீராக அனுப்பி இருந்த போதிலும் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்புடன் செயல்பட வேண்டும் என்று கூறியிருந்தார்கள். எனவே, நான் எப்போதும் உங்களுக்கு ஒத்துழைப்பை வழங்குவேன். நீங்கள் எனது கூற்றை ஏற்றுக் கொண்டாலும் சரி; இல்லையென்றாலும் சரியே. எல்லா விஷயங்களிலும் நான் உங்கள் கூற்றை ஏற்பேன் என்று கூறினார்கள்.

ஆக, இதுதான் சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப சரியான முடிவெடுத்து முஸ்லிம்களின் வலிமையை உறுதிப்படுத்துவதற்காக தனது அதிகாரத்தையும் விட்டு விடுவதாகும். ஒருவருக்கொருவர் இடையிலான இந்த ஒத்துழைப்பு தான் இன்று முஸ்லிம்களின் வலிமையை ஒரு வல்லமைமிக்கதாக ஆக்க முடியும். இதுவே இன்றைய முஸ்லிம்களின் தேவையாகும்.

அடுத்து ஹஸ்ரத் ஜாஃபர் (ரலி) அவர்கள் ஆவார்கள். அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெரிய தந்தையாரின் மகன் வழி சகோதரர் ஆவார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் உடன் பிறந்த சகோதர் ஆவார்கள். அன்னாரும் ஆரம்ப காலகட்டத்தில் இஸ்லாத்தை ஒப்புக் கொள்வதற்கான பாக்கியத்தை பெற்றார்கள். மேலும் மக்காவின் நிலைமையின் காரணமாக ஹப்ஷாவிற்கு ஹிஜ்ரத் செய்து சென்றார்கள். மக்காவாசிகளுக்கு இது பற்றி தெரிய வந்த போது அவர்கள் தமது இரு தலைவர்களுக்கு பல்வேறு அன்பளிப்புகளைக் கொடுத்து வழியனுப்பி வைத்தார்கள். ஹப்ஷாவின் தலைவர்களுக்கு பரிசுப் பொருட்களையும் அனுப்பிக் கொடுத்தார்கள். எங்களது சில புரியும் தன்மையற்ற இளைஞர்கள் தமது மார்க்கத்தை விட்டு விட்டு இங்கு வந்து விட்டார்கள். அதாவது உங்கள் நாட்டிற்கு வந்துள்ளார்கள். உங்களது மார்க்கத்தையும் கூட அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. முற்றிலும் புது மார்க்கமாகும் என்ற செய்தியை தமது தலைவர்களின் மூலம் அனுப்பி வைத்தார்கள். மேலும் ஏராளமான பரிசுப் பொருட்களுடன் அபிசீனியா சென்றார்கள். அங்கு சென்று அங்குள்ள தலைவர்களுக்கு பரிசுகளைக் கொடுத்த அரசரை சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று கூறினார்கள். அரசரை சந்தித்தார்கள். அரசருக்கும் பரிசுகளை வழங்கினார்கள். அவர்களின் விஷயங்களைக் கேட்ட பிறகு அபிஸீனியாவின் மன்னர் முஸ்லிம்களை தமது அரசவைக்கு வரவழைத்தார். முஸ்லிம்கள் நம்முடன் எவ்வாறு நடந்து கொள்ளப்படுமோ என்ற அச்சத்துடன் அங்கு சென்றார்கள். நீங்கள் உங்களின் மார்க்கத்தை கைவிட்டதற்கான காரணம் என்ன ? என்று நஜ்ஜாஸி கேட்டார். முந்தைய எந்த மார்க்கத்தையும் நீங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. எங்களது மார்க்கத்தையும் அதாவது கிறித்தவத்தையும்

நீங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

ஹஸ்ரத் ஜாஃபர் (ரலி) அவர்கள் முஸ்லிம்களின் பிரதிநிதியாக செயல்பட்டார். கூறினார்கள். அரசரே ! நாங்கள் அறிவீனமான சமுதாயத்தை சார்ந்தவர்களாக இருந்தோம். சிலைகளை வணங்கி வந்தோம். இறந்தவற்றை உண்டு வந்தோம். தீய நடத்தையும், உறவினர்களுடன் தவறாக நடந்து கொள்வதும் எங்களின் வாடிக்கையாக இருந்தது. எங்களில் வலிமைமிக்கவர் பலகீனமானவரை நசுக்கி வந்தார். இந்த நிலைகளில் அல்லாஹ் எங்களில் ஒரு தூதரை அனுப்பினான். அவரின் கண்ணியத்தையும் உண்மையையும், அமானிதத்தை பேணுதலையும், தூய்மையையும், குடும்ப மேன்மையையும் நாங்கள் நன்றாக அறிந்திருந்தோம்.

அவர் எங்களுக்கு இறைவனின் ஏகத்துவத்தின் பக்கமும், அவனை வணங்குவதின் பக்கமும் எங்களை அழைத்தார். மேலும் இறைவனுக்கு எதனையும் இணையாக்கக் கூடாது என்றும், சிலைகளை வணங்கக்கூடாது என்றும் எங்களுக்கு போதித்தார். உண்மை, உறவுகளை பேணுதல், அண்டை அயலாருடன் நல்ல முறையில் நடத்தல் போன்றவற்றை போதித்தார். வீண் சண்டை சச்சரவுகளிலிருந்தும் இரத்தம் சிந்துவதிலிருந்தும் எங்களை தடுத்தார். வெட்கக்கேடான விஷயங்களிலிருந்து விலகி இருக்கும்படி போதித்தார். பொய் பேசுவதிலிருந்தும், அனாதைகளின் செல்வங்களை விழுங்குவதிலிருந்தும், தூயவர்களின் மீது பழி சுமத்துவதிலிருந்தும் எங்களை தடுத்தார். மேலும் ஏக இறைவனை வணங்க வேண்டும் என்று எங்களுக்கு கட்டளையிட்டார். நாங்களும் அதனை ஏற்றுக் கொண்டோம். மேலும் அவரது போதனையின்படி நாங்கள் செயல்படுகின்றோம்.

இதன் காரணமாக எங்கள் சமுதாயம் எங்களுக்கு எதிராகி விட்டது. எங்களுக்கு துன்பம் இழைத்து வருகின்றது. அநீதிகளை இழைத்தது. அது உச்சத்தை அடைந்தவுடன் நாங்கள் எங்கள் நாட்டை விட்டு வெளியேறி உங்களின் அடைக்கலத்தில் வந்திருக்கின்றோம். ஏனென்றால் உங்களின் நீதி மற்றும் நேர்மையின் புகழை கேள்விபட்டுள்ளோம். அரசரே ! இந்த நாட்டில் எங்கள் மீது எந்த அநீதியும் இழைக்கப்படாது என்று நாங்கள் உங்கள் மீது நம்பிக்கை வைத்திருக்கின்றோம் என்று கூறினார்கள். இதை வெவியேற்ற அரசர் மிகவும் தாக்கத்திற்கு உள்ளானார். பின்னர் உங்களது தூதரின் மீது இறங்கிய அந்த இறை வேதத்தின் சில வசனங்களை எனக்கு ஓதிக் காட்டுங்கள் என்று கூறினார்.

சூரா மர்யமின் வசனங்களை நஜ்ஜாஸி அரசர் அழும் அளவிற்கு மிக அழகிய குரலில் ஓதினார்கள். அதைக் கேட்ட நஜ்ஜாஸியின் கண்களிலிருந்து கண்ணீர் வந்தது. இறைவன் மீது ஆணையாக ! இந்த வேதமும் ஹஸ்ரத் மூஸாவின் வேதமும் ஒரே ஊற்றிலிருந்து வெளிப்பட்டது போல தோன்றுகின்றது என்று கூறினார். பின்னர் அவர் மக்கத்து தூதுவர்களிடம் கூறினார். நான் இந்த மக்களை உங்களுடன் அனுப்பி வைக்க மாட்டேன் என்று கூறி விட்டார். இனி இவர்கள் இங்கு தான் இருப்பார்கள். இந்த மக்கத்து தூதுவர்கள் அரசரிடம் கூறினார்கள். இவர்கள் ஹஸ்ரத் ஈஸாவை கிறித்தவர்களின் கொள்கைக்கேற்ப ஏற்றுக் கொள்வதில்லை. அவரின் அந்தஸ்த்தை இவர்கள் குறைத்து மதிப்பிடுகின்றார்கள். அப்போது அரசர் மீண்டும் முஸ்லிம்களை அழைத்தார். ஹஸ்ரத் ஈஸாவைப் பற்றிய கொள்கைகளைக் கேட்டு அறிந்தார்.

அப்போது ஹஸ்ரத் ஜாஃபர் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் ஈஸா அல்லாஹ்வின் அடியாரும் அவனது தூதரும் ஆவார். அவரை அல்லாஹ் கன்னிப்பெண்ணான ஹஸ்ரத் மர்யம் (அலை) அவர்களுக்கு மகனாக வழங்கினான். அந்த அரசர் நிலத்திலிருந்து ஒரு குச்சியை எடுத்தார். ஹஸ்ரத் ஈஸாவின் அந்தஸ்த்து என்பது இவர்கள் எடுத்துரைத்த கூற்றிலிருந்து இந்த குச்சியை விட கூடுதல் கிடையாது. முஸ்லிம்களிடம், இங்கு உங்களுக்கு முழுமையான சுதந்திரம் உள்ளது என்று கூறினார்கள். அன்னாரின் ஹிக்மத் மற்றும் அகப்பார்வை மற்றும் ஞானம் போன்றவை முஸ்லிம்கள் அங்கு தங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்து கொடுத்தது.

ஒரு சஹாபி மஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்கள் ஆவார்கள். அன்னாரின் தாய் பெரும் செல்வ சீமாட்டி ஆவார்கள். பெரும் செல்வச் செழிப்பில் அவர்கள் வளர்ந்து ஆளானார்கள். மிகவும் உயர் தரமான

ஆடையை அணிந்து வந்தார்கள். மிக அழகிய இளைஞராக இருந்தார்கள். ஸஅத் பின் அபி வக்காஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

ஹஸ்ரத் மஸ்அப் அவர்களை நான் செல்வ செழிப்பிலும் கண்டுள்ளேன். முஸ்லிம் ஆன பிறகும் அன்னாரின் நிலைமையை கண்டுள்ளேன். அன்னார் இறை வழியில் பெரும் துக்கங்களை சகித்துக் கொண்டார்கள். ஸஅத் அவர்கள் கூறுகின்றார்கள். செல்வச் செழிப்பில் வளர்ந்து ஆளாகிய அதே இளைஞனின் தோல் கடினத்தின் காரணமாக பாம்பின் தோல் உரிவது போன்று உரிந்தது.

ஒரு நாள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் மஸ்அப் (ரலி) அவர்களை இந்நிலையில் கண்டார்கள். அதாவது ஒரு சபையில் ஹஸ்ரத் மஸ்அப் அவர்கள் தோலினால் ஆன உடையை அணிந்து வந்ததைக் கண்டார்கள். துணியினாலான ஆடை அன்னாரிடம் இல்லாமல் இருந்தது. அதைக் கண்டதும் சஹாபாக்கள் வெட்கத்தால் பார்வையை தாழ்த்திக் கொண்டார்கள். ஏனென்றால் அன்னாரின் முந்தைய செல்வச் செழிப்பின் நிலையை அவர்கள் பார்த்திருந்தார்கள். ஆயினும் அன்னாருக்கு உதவி செய்ய இயலாதவர்களாக இருந்தார்கள். சபையில் வந்து ஹஸ்ரத் மஸ்அப் அவர்கள் ஸலாம் கூறியதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் மிக அன்புடன் பதிலளித்தார்கள். இந்த செல்வந்தரின் முந்தைய நிலைமை மற்றும் தற்போதைய நிலைமையை பார்த்தவுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்களில் கண்ணீர் வந்தது. பின்னர் அன்னாருக்கு ஆறுதல் அளித்தவாறு, அல்ஹம்துலில்லாஹ். உலகவாதிகளுக்கு உலகம் கிடைக்கட்டும். நான் மஸ்அப் அவர்களை மக்கத்து நகரத்திலும் பார்த்திருக்கின்றேன். அப்போது அன்னாரை விட செல்வந்தர் எவரையும் கண்டதில்லை. இவர் தமது தாய் தந்தையரின் மிக அன்புமிக்க பிள்ளையாவார். அவருக்கு உண்பதற்கும் குடிப்பதற்கும் தேவையான அனைத்து அருட்கொடைகளும் கிடைத்திருந்தன. ஆனால் இறைத்தூதரின் மீதான அன்பானது அவரை எந்த நிலையில் கொண்டு வந்து விட்டுள்ளது என்றால் அவர் அல்லாஹ்வின் திருப்திக்காக அனைத்தையும் விட்டு விடுவதற்கு தயாராகி விட்டார். பின்னர் இறைவன் இவரது முகத்திற்கு ஒளியை வழங்கி விட்டான் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் மஸ்அப் அவர்களுக்கு தப்லீக் செய்வதற்கும் மிக அதிக ஆர்வம் இருந்தது. மிக அன்புடன் தப்லீக் செய்து வந்தார்கள். எனது விஷயங்கள் பிடித்திருந்தால் கேளுங்கள். பிடிக்கவில்லை என்றால் கேட்காதீர்கள் என்று கூறுவார்கள். இவ்வாறு மதீனாவின் அறியாத நபர்களுக்கும் கூட உண்மையின் தூதுச் செய்தியை கொண்டு சேர்த்தார்கள். ஏராளமான மக்கள் அன்னாரின் தப்லீக்கின் மூலமாக முஸ்லிமானார்கள்.

ஹஸ்ரத் உஸைத் பின் அஸீர் அவர்கள் அன்ஸாரி சஹாபி ஆவார்கள். அவர்களுக்கு ஹஸ்ரத் மஸ்அப் (ரலி) அவர்களின் மூலமாக இஸ்லாத்தை ஒப்புக் கொள்ளும் பாக்கியம் கிடைத்தது. இவர்களின் ஆன்மீக நிலைகளைப் பற்றி இவ்வாறு அறிவிப்பில் வருகிறது. அவர்கள் கூறுகின்றார்கள். எனது மூன்று நிலைகள் இருக்கின்றன. இவற்றில் ஏதாவதொரு நிலை கூட என்னிடம் நிலைத்திருக்கும் என்றால் நான் என்னை சொர்க்கவாசிகளில் ஒருவனாக கருதுவேன். முதலாவது விஷயம் என்னவென்றால், நான் திருகுர்ஆனை ஓதும் போது அல்லது வேறு எவராவது ஓதும் போது அதை கேட்கின்ற நிலையில் என்னிடம் அச்சத்தின் நிலை மேலோங்கி விடுகின்றது. திருக்குர்ஆனுக்கு செவி மடுப்பதால் ஏற்படுகின்ற இந்த நிலை எனது நிரந்தர நிலையாக இருந்தால் நான் என்னை சொர்க்கவாசிகளில் ஒருவனாக கருதுவேன்.

இரண்டாவது விஷயம் என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குத்பா வழங்குகின்ற போது நான் மிகவும் கவனத்துடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அறிவுரைகளை செவிமடுக்கின்றேன். அப்போது எனக்கு ஏற்படுகின்ற நிலை எனது நிரந்தர நிலையாக ஆகி விட்டால் நான் சொர்க்கவாசிகளில் ஒருவனாக ஆகி விடுவேன். மூன்றவாது விஷயம் என்னவென்றால், நான் ஒருவரின் ஜனாஸாவில் கலந்து கொள்ளும் போது அந்த ஜனாஸா எனது ஜனாஸாவாகும் என்ற உணர்வு எனக்கு ஏற்படுகின்றது. இந்த நிலை எனக்கு அச்சத்தை

ஏற்படுத்துகின்றது. இந்த அச்சத்தின் நிலை எனது நிரந்தர நிலையாக ஆகி விட்டால் சொர்க்கவாசிகளில் ஒருவனாக என்னை நான் கருதுவேன்.

எவ்வாறிருப்பினும் இது அன்னாரின் சிறப்பான இறையச்சத்திற்கான அடையாளமாகும். இந்த நிலைதான் மனிதனுக்கு அல்லாஹ் மீதான அச்சத்தை ஏற்படுத்துகின்றது. மேலும் அதன் விளைவாக மனிதன் நன்மைகளை மேற்கொள்ள முயற்சி செய்கின்றான். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர் அல்லாஹ்வை நினைவு கொள்கின்றார். பல்வேறு சந்தர்ப்பங்களில் அன்னாருக்கு ஏற்பட்ட இந்த நிலையே நிச்சயமாக அன்னார் சொர்க்கவாசியாக இருந்தார்கள் என்பதையும் அன்னார் இறை திருப்தியை பெறக் கூடியவராக இருந்தார்கள் என்பதையும் வெளிப்படுத்துகின்றது.

அடுத்து மற்றொரு அன்ஸாரி சஹாபி அபீ பின் கஅப் அவர்கள் ஆவார்கள். அன்னாரும் செயல் முன்மாதிரியைக் கொண்ட அறிஞர் ஆவார்கள். மிக பேணுதலுடன் ஐவேளை தொழுகைகளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் நிறைவேற்றி வந்தார்கள். தொழுகைகளை பேணுவது தொடர்பான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டுதலை அன்னார் அறிவிக்கின்றார்கள். ஃபஜ்ர் தொழுகைக்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுகைக்கு வராத சில நபர்களைக் குறித்து அவர்கள் ஏன் தொழுகைக்கு வரவில்லை ? என்று வினவினார்கள். பின்னர் அன்னார் கூறினார்கள். இரண்டு தொழுகைகள் எப்படிப்பட்டதென்றால் அது பலவீனமான நம்பிக்கை கொண்ட மக்கள் மற்றும் நயவஞ்சகர்களுக்கு மிகவும் சுமையானதாக இருக்கும். இவர்களுக்கு இந்த தொழுகைக்கு எத்துனை நற்கூலி இருக்கிறது என்பது தெரிய வந்தால் நிச்சயமாக அவர்கள் தமது முழங்கால்களில் தவழ்ந்து வர நேரிட்டாலும் இந்த தொழுகைகளில் கலந்து கொள்வார்கள். ஃபஜ்ர் மற்றும் இஷா என்ற இரண்டு தொழுகைகள் தொடர்பாக குறிப்பாக அன்னார் கவனமூட்டியுள்ளார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள் :

"இந்த அளவிற்கு சஹாபாக்கள் உண்மையையும், நன்றியுணர்வையும் வெளிப்படுத்தும் வகையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அப்படி என்ன இருந்தது ? அவர்கள் சிலை வணக்கத்திலிருந்து முகம் திருப்பியதோடு மட்டுமல்லாமல் படைப்பினங்களை வணங்குவதிலிருந்தும் விலகிக் கொண்டார்கள். அது மட்டுமல்லாமல் உலகத்தை தேடுவதே அந்த சஹாபாக்களின் உள்ளங்களிலிருந்து விலகிப் போனது. அவர்கள் இறைவனை பார்க்கத் தொடங்கி விட்டார்கள். அவர்கள் மிகவும் உத்வேகத்துடன் இறை வழியில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டார்கள். எந்த அளவுக்கு என்றால் அவர்களில் ஒவ்வொருவரும் இப்ராஹீமாக இருந்தார்கள். அவர்கள் முழுமையான கலப்பற்ற தன்மையுடன் இறைவனின் கம்பீரம் வெளிப்படுவதற்கு எப்படிப்பட்ட பணிகளை செய்தார்கள் என்றால் அவர்களுக்குப் பிறகு அதற்கு நிகரான உதாரணமே இல்லை என்று கூறலாம். மிக மகிழ்ச்சியுடன் இறை வழியில் அறுக்கப்படுவதை ஏற்றுக் கொண்டார்கள். இன்னும் சொல்லப்போனால் இதுவரை ஷஹாதத் எனும் பானத்தை அருந்தாத சில சஹாபாக்கள் தமது விசுவாசத்தில் ஏதோ குறை உள்ளது என்ற எண்ணத் தொடங்கினார்கள். இதைப் பற்றி இந்த வசனத்தில் இவ்வாறு வருகிறது. மின்கும் மன்கஸா நஹ்பஹு வ மின்கும் மன் யன்தஸிர் அதாவது சிலரோ ஷஹீதாகி இருந்தார்கள். இன்னும் சிலரோ எப்போது ஷஹீதாவோம் என்று எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்தனர். இந்த சஹாபாக்களுக்கு மற்றவர்களைப் போன்று ஆசைகள் இல்லாமல் இருந்தனவா ? பிள்ளைகள் மீதான அன்பும் ஏனைய தொடர்புகளும் அவர்களுக்கு இல்லாமல் இருந்தனவா ? என்று மக்கள் சிந்திக்க வேண்டும். ஆனால் இந்த ஈர்ப்பானது அவர்களை எப்படி அன்பில் தழைத்தவர்களாக ஆக்கி விட்டது என்றால் அவர்கள் எல்லா விஷயங்களையும் விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கினார்கள்."

அடுத்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள் :

"மக்காவில் அமர்ந்து கொண்டு இந்த குறைஷிய நம்பிக்கையாளர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு உதவி செய்தார்கள். அந்த உதவியில் வேறு எந்தவொரு சமுதாயத்தின் நபரும் பங்கு பெறவில்லை. ஓர் இருவரைத் தவிர. அது ஈமானிய ஆற்றல் மற்றும் இறை ஆற்றலின் உதவியுமே

அதில் பங்கு வகித்தது. எந்த வாளும் உறையிலிருந்து வெளியில் எடுக்கப்படவில்லை. எந்த ஈட்டியையும் கையில் ஏந்தப்படவில்லை. இன்னும் சொல்லப் போனால் பௌதீகமான முறையில் சண்டையிடுவது முற்றிலும் தடுக்கப்பட்டிருந்தது. ஈமானிய ஆற்றலும் இறை ஞானம் எனும் ஒளிமயமான ஆயுதங்களாக இருந்தன. மேலும் பொறுமையும், உறுதிப்பாடும், கலப்பற்ற தன்மையும், அன்பும், விசுவாசமும், நன்றியுணர்வும், இறைஞானமும், உண்மையான மார்க்கத்தின் அறிவும் அவர்களிடம் கூர்மையான ஆயுதங்களாக இருந்தன. அந்த ஆயுதங்களை அவர்கள் மக்களிடம் காட்டி வந்தனர்.

ஏச்சுப் பேச்சுக்களை கேட்டு வந்தனர். கொலை மிரட்டலுக்கு ஆளாகினர். எல்லா புறமும் எல்லா வகையான இழிவையும் எதிர் கொண்டார்கள். ஆனால் அவர்கள் காதல் மயக்கத்தில் கிடந்தார்கள். எந்த பாதிப்பையும் பற்றி எந்த கவலையும் அவர்கள் படவில்லை. எந்த சோதனையைக் கண்டும் அவர்கள் அஞ்சவில்லை. உலக வாழ்க்கை என்ற அடிப்படையில் பார்த்தால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அப்படி ஒன்றுமே இல்லாமல் இருந்தது. அதற்கு அவர்கள் ஏதேனும் ஒன்றுக்கு ஆசைப்பட்டு தமது உயிரையே ஆபத்தில் போடும் அளவுக்கு நபி (ஸல்) அவர்களிடம் என்ன இருந்தது? ஒன்றும் இல்லை? தனது சமுதாயத்தின் நீண்ட கால உறுதியான தொடர்பைக் கூட அவர்கள் முறித்துக் கொண்டார்கள். அப்படிப்பட்ட சமயத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஏழ்மையும், வறுமையும் மற்றும் கடினமான காலகட்டமே எஞ்சியிருந்தது. ஆயினும் சஹாபாக்கள் இந்த ஏழ்மையான அந்த நபரின் பின்னால் நின்று கொண்டார்கள். உண்மையில் அவர் மகத்துவமிக்க அரசராக இருந்தார். மிகக் கடினமான காலகட்டத்திலும் இந்த சஹாபாக்கள் உண்மையுடனும், நன்றியுணர்வுடனும், விசுவாசத்துடனும் அன்னாரின் கரங்களை பற்றிப் பிடித்துக் கொண்டார்கள். எதிர்கால வெற்றிகளைப் பற்றி கற்பனை செய்வது ஒரு பக்கம் இருக்கட்டும். அந்த சீர்திருத்தவாதியின் உயிர் கூட சில நாட்களில் சென்று விடும் என்ற சூழல் அப்போது இருந்தது. ஆயினும் இந்த சஹாபாக்களின் நன்றியுணர்விற்கான அந்த வெளிப்பாடு என்பது அப்படிப்பட்ட கடினமான காலத்தில் ஈமானிய ஆற்றலால் நிகழ்ந்து வந்தது. மிகவும் தாகித்த ஒருவன் இனிப்பான நீரூற்றின் முன்னால் எப்படி சென்று நிற்பானோ அப்படி சென்று அந்த சஹாபாக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன் நின்றார்கள்.

அல்லாஹ் இந்த ஒளிமயமான நட்சத்திரங்களின் முன்மாதிரிகளின்படி நடந்தவாறு நம்மை அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் மீது அன்பு செலுத்தக் கூடியவர்களாக ஆக்குவானாக. மேலும் நம்முடைய ஒவ்வொரு அமலும் அல்லாஹ்வின் திருப்திக்குரியதாக அமையட்டுமாக.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
on 22.12.2017
Translated by Moulavi A.Abdur Rahman Tahir
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516